986 ஏப்ரல் 25]

(முற்பகல் 10-00) 0-

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களைக் கண்காணிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், கல்வித்துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கூடங்களுக்குச் செல்கின்ற நேரத்தில், பொதுமக்களை சந்திக்கின்ற நேரத்தில் பொதுமக்களும், அங்கிருக்கின்றவர்களும் சத்துணவுக் கூடங்களில் தவறுகள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். சத்துணவுக் கூடங்களைச் கண்காணிக்கின்ற நேரத்தில் சில தவறுகள் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. அந்த அமைப்பாளரிடம் புகார் செய்யும் நோட்டுப் புத்தகங்கள் இருக்கின்றன. அதில் நாங்கள் எழுதிவிட்டு வந்தால், அதை மாவட்ட ஆட்சித் தலைவர் சரியாக கவனிப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர் அங்கே போய் பார்ப்பதற்கு அனுமதியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களை சந்திக்கின்றபோது ஏதாவது தவறுகள் சத்துணவுக் கூடங்களில் நடக்கிறது என்று சொன்னால், அதைப் பார்க்கலாம். தவறு இருக்கிறது என்று தெரிந்தால், அந்தத் தவறைக் குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளருக்கோ எழுதலாம். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களே நடவடிக்கை மேற்கொள்வது என்று முற்பட்டால், அந்த மையத்தினுடைய அன்றாட வேலைகளுக்குத் தடங்கல் ஏற்படும். எனவே, அதை யார் யார் எப்படி எப்படி பார்வையிடலாம் என்று முன்பே அதற்குரிய வரைமுறை வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கக் கடன்கள்.

564 –(*வினா எண். 3424) –**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக ரூபாய் 2,250 கடன் பெற்று விலைவாசி உயர்வின் காரணமாக கட்டப்பட்ட வீடுகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளவர்களது வீடுகளை கட்டி முடிக்க கடன் தொகையை உயர்த்தித் தரும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : ஆம்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டிற்கும் இதுவரையில் ரூ. 2,400 லோன் கொடுக்கப்பட்டு, பாதியிலே பணப் பற்றாக்குறை காரணமாக வீடு கட்டப்படாது தடைப்பட்டிருக்கிறது. இதை கவனத்திற்கொண்டு, கிட்டத்தட்ட ரூ. 10,000 வரை உயர்த்தித் தருகின்ற நோக்கம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ. 2,400 வீடு கட்டுவதற்குத் தருவதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது ரூ. 6,000 வரை தருகின்ற அளவில் திட்டம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற பணத்தைக் கொண்டு அவர்கள் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை, உதவிகளை அரசு தருகிறோம். ரூ. 10,000 ஆக உயர்த்துகின்ற எண்ணம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுக்கா கிராமியக் கூட்டுறவுச் சங்கத்திலும், மயிலாடுதுறை கோட்ட அளவிலான கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திலும் ரூ. 2,500 கொடுக்கப்பட்டு, அந்த ரூ. 2,500க்கு அக்ரீமெண்ட் ரிஜிஸ்ட்ரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பணப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் தடைப் பட்டிருக்கிறது. ரூ. 2,400 கொடுக்கப்பட்டது போக, மீதமுள்ள ரூ. 3,600க்கு அவர்களிடமிருந்து தேவையான அக்ரிமெண்ட் செய்துகொண்டு, அந்தத் தொகையை அரசு வழங்க, மாவட்டத்தில் எவ்வளவு வீடுகள் பாதிக்கப்பட்டு பாதியில் நின்றுகொண்டிருக்கின்றன என்பதை அறிந்து, அந்த வீடுகளைக் கட்டுவதற்கு மீதிப் பணத்தைக் கொடுப்பதற்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இந்த அளவில் பாதியிலே நிற்கப்பட்ட வீடுகள் 1,546. இதற்காக ரூ. 24,64,400 ஒதுக்கப்பட்டதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊர்களுக்கு நிச்சயமாக உதவுகின்ற தன்மையோடு இந்த அரசு உதவும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

1986 ஏப்ரல் 25]

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட கடன் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது சென்று கேட்டால், 'டாட்கோ' மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லி, பல வீடுகள் தென்னாற்காடு மாவட்டத்தில் பாதியிலே நிற்கின்றன. தீயினால் பாதிக்கப்பட்ட இஞ்சாநத்தம், படப்பை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு கடன் கொடுக்கப்படாததை இதுவரை அரசு பரிசீலிக்கவில்லை. ஆகவே தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக உடனடியாக வட்ட ஆட்சியர் மூலமாக உதவிசெய்கின்ற தன்மையோடு இப்போது நடந்து வருகிறது. வீட்டு வசதி சங்கம் மூலமாக, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொந்தமாக பட்டா அவர்களுக்கு இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற முறையில் அரசு உதவுகின்ற தன்மையில் ஈடுபடும்.

திருச்சியில் இராணுவத்துக்குச் சொந்தமான நிலங்கள்.

565—(*வினா எண். 5136) திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி ஜங்ஷன் அருகே உள்ள ராணுவ இலாக்காவிற்கு சொந்தமான (Shooting range) பகுதியை தமிழக அரசிற்கு ராணுவ இலாக்கா அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திருச்சி நகரில் இப்பகுதியை வீட்டு வசதித் துறை ஏற்று வீடுகள் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, இன்றைய தினம் திருச்சி நகரம் இதயம் போன்ற பகுதியாக இருக்கிற காரணத்தினால் நகரத்தின் மத்தியில் இருக்கிற பகுதியாக அது இருப்பதால் துப்பாக்கிச் சுடுதல் போன்ற பயிற்சிகள் அங்கே நடத்தப்படுவதால் ஒரு முறை அங்கே துப்பாக்கிச் சூடு நடைபெற்று ஒருவர் பலியாகி மற்றும் பலர் காயம் அடைந்திருக்கிறார்கள், அந்தப்பயிற்சி ஆபத்தான இடத்தில்நடத்தப்படுவதால் வேறு இடத்தை அதற்காக மையப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு அந்த இடத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அமைச்சர்